முருகப்பெருமான் துணை

**மகான் நம்மாழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.08.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானிகளின் சக்திமிகு சபையை
ஞானசபையாக உலகமக்களுக்கு
ஞானிகளாக வாய்ப்பு தரும் வண்ணம்
நம்பிக்கையூட்டி பிரணவக் குடில் படைத்த
2. படைத்தநல் ஆறுமுக அரங்கனே
பாருலகில் உன் பெருமை கூறி
தடையற அருளாசி தன்னை
தவசிக்கு நம்மாழ்வார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான சுபகிருது யாளிதிங்கள்
ஞானமுள விய திகதி கதிரோன் வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 12 நாள், 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை)
நாட்டிடுவேன் கரும வினை வெல்ல
4. வெல்லவே வேலவன் சக்தியான
வினவிடுவேன் அரங்கமகான் தடம்
வல்லமைபெற வருதல் வேண்டும்
வணங்கி தீட்சைதனை ஏற்க
5. ஏற்கவே மாற்றமும் தேற்றமும்
எல்லா வகையும் பாதுகாப்புகூடி
பற்றிய கரும வினை அகலும்
பண்பான குணநலம் பெருகி
6. பெருகியே ஞானிகள் நாமசெப
பூசை பலனால் அனைத்துமே
முருகப்பெருமான் அருள்கிட்டும்படி
முழுமைநிலை கூடி இனிதே
7. இனிதே தானதரும சிந்தை
எக்கணமும் நிரம்பிய வண்ணம்
கனிவேலன் ஆசி அருளாக
கண்டடைவர் ஞானவான்கள் ஆக
8. ஆகவே இந்தநிலை அடைய
அரங்கமகான் தேடலின் வழி
செகம்தனை மாற்றும் சக்திமிகு
சீடர்களாக உயர் ஞானிகளாக
9. ஞானிகளாக உலகோர் உயர்ந்து
ஞானசபை கொண்ட உலகாக
ஞானிகள் படை நிரம்பியே
ஞானிகளின் வெளிப்பாடு பெருகி

10. பெருகியே நல்லோர் ஆட்சியாம்
பிசகில்லா ஞான ஆட்சி
முருகப் பெருமான் அருளாசிபட
மொழிகுவேன் உலகம் கண்டடையும்

11. அடையவே அன்னதானமெனும்
ஆற்றல் மிக்க சேவை பெருக்கி
தடையற அரங்கன் வழி வர
தரணியே சடுதி மாற்றம் காணும்
அருளாசி முற்றே

—சுபம்—